தலைமைச் செயலகம்
சென்னை—9

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(கு.பு)துறை
## அரசு கடித (நிலை) எண்.54, நாள் 23.05.2006

அனுப்புநர்
திரு அரங்க செல்லமுத்து, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து செயலகத்துறைகள்.(இணைப்புடன்)
அனைத்து துறைத் தலைவர்கள்.(இணைப்புடன்)
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.(இணைப்புடன்)

ஐயா/ அம்மையீர்,

பொருள் கருணை அடிப்படையில் பணிநியமனம்—விண்ணப்பதாரர்கள் வட்டாட்சியரிடம் சான்றிதழ் கோருதல்—ஒருங்கிணைந்த சான்றிதழ் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:

1) அரசு கடித (நிலை) எண்.31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 25/2/1994.
2) அரசு கடித (நிலை) எண்.2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை,.துறை, நாள் 4.1.2006.
3) கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (கடன்) அவர்களின் கடித எண்.ந.க.186791/2004/ப.கொ.பு நாள் 5.1.2006.
4) சிறப்பு ஆணையர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.3—53898/05, நாள் 9.1.2004.

———

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் பார்வை 4—ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்கான வாரிசு சான்றிதழ், அசையும் (மற்றும்) அசையாச் சொத்துகள் பற்றிய சான்றிதழ், குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை வட்டாட்சியரிடமிருந்து தனித்தனியாக பெற்று அனுப்புவதற்குப்

பதிலாக, மேற்கண்ட அனைத்துச் சான்றிதழ்களையும் ஒருங்கிணைந்த படிவத்தில் ஒரே சான்றிதழாக வழங்கலாம் என அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. அரசு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை நன்கு ஆராய்ந்து, கருணை அடிப்படையில் நியமனம் கோரும் விண்ணப்பதாரர்களுக்கு இக்கடித இணைப்பில் உள்ள படிவத்தில் ஒருங்கிணைந்த சான்றிதழ் வட்டாட்சியரால் வழங்கப்பட வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

3. இக்கடிதம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து கருணை அடிப்படையில் நியமனம் கோரும் விண்ணப்பதாரர்களுக்கு ஒருங்கிணைந்த படிவத்தில் சான்றிதழ் வழங்குமாறு அனைத்து வட்டாட்சியர்களுக்கும் அறிவுரை வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. கருணை அடிப்படையிலான நியமனத்திற்கான ஒருங்கிணைந்த சான்றிதழ் அரசாணை (நிலை) எண்.581, வருவாய்த்துறை, நாள் 3.4.1987–ன்படி முறையான விசாரணைக்குப்பின் வட்டாட்சியர்களால் மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிடுகிறது.

5. ஏற்கனவே பெறப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களை ஏற்றுக் கொள்ளுமாறும், ஒருங்கிணைந்த படிவத்தில் சான்றிதழ் பெற்றுத்தர வலியுறுத்த வேண்டாம் என்றும் அனைத்து செயலகத் துறைகளும் துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

அரசுச் செயலாளருக்காக

நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் அனைத்துப்பிரிவுகள் (இணைப்புடன்)
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–2 (இணைப்புடன்)
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5 (இணைப்புடன்)
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–32 (இணைப்புடன்)

இணைப்பு

<u>கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்றிதழ்</u>

1) ---------------------------- மாவட்டம் --------------------------

அலுவலகத்தில் ----------------------------- ஆக திரு.------------

என்பவர் பணிபுரிந்துள்ளார். இவர் பணியிலிருக்கும்போதே கடந்த -----------

தேதியன்று இறந்துவிட்டார்.

2) இவரது நிலையான முகவரி ----------------------------- மாவட்டம்

---------------------------- வட்டம் -----------------------

கிராமம் ---------------------- தெரு கதவிலக்கம் எண். ---------

------------ ஆகும்.

3) இறந்தவர் மற்றும் அவரது குடும்பத்தினர் பெயரில் கீழ்க்கண்டவாறு அசையா சொத்து உள்ளது/ அசையா சொத்து ஏதும் இல்லை.

சொத்தின் விபரம் | தற்கால மதிப்பு (ரூபாயில்)

மேற்கண்ட சொத்துக்களின் மூலம் வருமானம் ஏதும் வரப்பெறவில்லை.

4) இறந்தவர் குடும்பத்தில் எவரும் அரசுப்பணியில் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை.

5) திரு ---------------------------- என்பவர் இறப்பிற்கு பிறகு கருணை அடிப்படையில் நியமனம் கோரும் அவரது மனைவி மறுமணம் செய்து கொள்ளவில்லை.

6) இறந்தவரின் குடும்பத்திற்கு அவரது ஊதியத்தினை தவிர வேறு வருமானமில்லை. அவரது மறைவிற்குப் பிறகு குடும்பம் வறிய நிலையில் உள்ளது. இக்குடும்பத்தின் தற்போதைய ஆண்டு வருமானம் ரூ. /–

(ரூபாய் –––––––––––––––––– )

7) இறந்த திரு –––––––––––––––––––––– என்பவருக்கு கீழ்க்கண்ட –––––––– நபர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவர்.

| வ.எண். | பெயர் | உறவுமுறை | வயது | மணமானவர்/ மணமாகாதவர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

வருவாய் வட்டாட்சியர்

பெறுநர்

––––––– –––––

––––– –––––––

அரங்க செல்லமுத்து,
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/ அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்